# 22 அருள் நிறை மரியே



படம் 22.1 - டொமினிக் குஸ்மான் அடிகளாருக்கு மரியன்னை காட்சியளித்தல்

**டொமினிக் குஸ்மான் அடிகளாருக்கு மரியன்னை காட்சியளித்தல்**

13ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்திலே கிழக்கு பிரான்சிலும் வட இத்தாலியிலும் கிறிஸ்தவ நம்பிக்கைக்கு எதிராக பல சக்திகள் செயற்பட்டன. ஸ்பானிய நாட்டைச் சேர்ந்த அருட்பணி டொமினிக் குஸ்மான் அடிகளார் இந்நிலையையிட்டு அதிக கவலையடைந்தார். அவர், ''டுலுஸ்'' என்ற பிராந்தியத்திற்கு அண்மையில் செபத்திலும் ஒறுத்தல் முயற்சியிலும் ஈடுபட்டு மேற்கூறப்பட்ட நிலையை மாற்றியருளுமாறு இறை தந்தையிடம் வேண்டினார். மூன்று நாட்களுக்குப்பின், மரியாள் செபமாலையைக் கையிலேந்திய வண்ணம் வானதூதருடன் டொமினிக் அடிகளாருக்குத் தோன்றி காட்சியளித்தார்.

மரியாள் : டொமினிக், உலகை புதுப்பிப்பதற்கு தூய திரித்துவம் பயன்படுத்தும் ஆயுதம் எது?

டொமினிக் அடிகளார் : மரியன்னையே, உமது திருமகன் இயேசுவுடன் நெருக்கமாக இருந்து மீட்பின் திட்டத்தை செயற்படுத்தும் நீர் என்னை விட அதுபற்றி அறிவீர்.

மரியாள் : கடின மனமுடைய மனிதர்களிடம் சென்று அவர்களை வெற்றிகொள்வதற்கு எனது செபமாலைப் பக்தியைப் பரப்புங்கள்

(அருட்பணி ஸ்தெனிஸ்லாஸ் பெர்னாண்டோ (அ.ம.தி) அவர்களின் ''செபமாலை'' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டது)

## பாத்திமா நகரில் மரியன்னை காட்சியளித்தல்



படம் 22.2 - பாத்திமா நகரில் மரியன்னை காட்சியளித்தல்

ஒரே குடும்பத்தின் சகோதரர்களான பிரான்சிஸ், ஜசிந்தா ஆகியோர் தமது உறவினரான லூசி என்பவருடன் பாத்திமா நகரில் வாழ்ந்து வந்தனர். தமது குடும்பத்தினரின் ஆடுகளை மேய்த்தலுக்குக் கொண்டு செல்வது இவர்களின் பொறுப்பாக இருந்தது. 1917 வைகாசி 13ஆம் திகதி (ஞாயிறு) இச் சிறுவர்கள் வழமைபோல தமது ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தனர். திடீரென இடி முழங்கியதைப் போன்ற ஒளிக் கதிரினால் அவர்கள் இருந்த இடம் பிரகாசித்தது. அச்சமுற்ற சிறுவர்கள் அங்கிருந்து செல்வதற்கு ஆயத்தமாகும் போது அவர்களுக்கு அண்மையிலிருந்த உயரமற்ற 'ஒக்' முட் புதரின் ஒளிக் கதிர் நடுவே இருந்து தம்மையே பார்த்துக்கொண்டிருந்த அழகான ஒரு பெண்ணைக் கண்டனர். செபமாலையைக் கையில் வைத்திருந்த அவர் ''அஞ்ச வேண்டாம் நான் உங்களுக்கு ஆபத்து இழைக்க மாட்டேன்'' எனக் கூறினார். மனதில் தைரியத்தை வரழைத்துக் கொண்ட லூசி, ''எங்கிருந்து வருகிறீர்கள்?'' எனக் கேட்க, ''வானகத்திலிருந்து வந்துள்ளேன்'' என்று அவர் பதிலளித்தார். உலகிலே பாவிகள் மனமாற்றம் பெறுவதற்காக செபிக்குமாறு கேட்டுக் கொண்ட அவர், ''செபமாலை செபியுங்கள்'' என்று கூறி மறைந்தார்.

(லிட்வின் கிரி அல்தெனிய என்பவரின் ''மகிழ்ச்சியான மரியன்னை காட்சி'' என்ற நூலிலிருந்து)



படம் 22.3 - லூர்து நகரில் மரியன்னை காட்சியளித்தல்

## லூர்து நகரில் மரியன்னை காட்சியளித்தல்

1858 மாசி 11ஆம் திகதி பெர்னதேத் என்ற சிறுமி தனது சகோதரி, நண்பி ஆகியோருடன் விறகு வெட்டுவதற்காக லூர்து நகரின் ஆற்றோரமாகச் சென்றாள். பெர்னதேத் ஆற்றின் மறுபக்கமாகச் செல்ல முற்படுகையில் பேரிரைச்சலுடன் மாபெரும் காற்று வீசியது. அச்சமுற்ற பெர்னதேத்

சுற்றும் முற்றும் பார்க்கையில் நதி கால்வாய்க்கருகில் உள்ள குகையில் பொன்நிறமான முகில்களுக்கு மத்தியில் ஒரு அழகான பெண் தோன்றுவதைக் கண்டாள். பெர்னதேத், அது பற்றிய தனது அனுபவத்தை இவ்வாறு கூறுகிறாள். ''என்னைப் பார்த்து,புன்னகைத்த அப்பெண் தன்னிடம் வருமாறு எனக்கு சைகை காட்டினார். நான் அச்சம் கொள்ளவில்லை. நான் எங்கு இருக்கிறேன் என்பதை மறந்தேன். நான் கண்களை மூடினேன் , கண்களைத் திறந்தேன். அந்த அழகு மிக்க பெண் என்னையே பார்த்துக்கொண்டிருந்தார். நான் விரைவாக செபமாலையைக் கையிலெடுத்து முழந்தாளிட்டேன். அப் பெண் தனது இடுப்பிலே தொங்கவிட்டிருந்த செபமாலையைக் கையிலெடுத்தார். நான் செபமாலை சொல்லும்போது அவரின் செபமாலை மெதுவாக நழுவியது. அதன் பின் அவர் முகில்களுடன் குகையினுள்ளே சென்றார்.''

(அருட்பணி ஜோசப் ஜெயசூரியரின் காட்சி தொகுப்பு நூலிலிருந்து)

மரியன்னை காட்சி கொடுக்கும் சந்தர்ப்பங்களிலெல்லாம் செபமாலை சொல்லுமாறு உலக மக்களை வேண்டினார். செபமாலையில் ''அருள் நிறைந்த மரியே'' என்ற செபத்தை நாம் சொல்கிறோம். இச் செபம் இரு பிரிவுகளை உள்ளடக்கியது.

1. கபிரியேல் தூதர் மரியாளுக்கு மங்கள வார்த்தை கூறியதை அடிப்படையாகக் கொண்டு (லூக் 1 : 26 - 38) அருள் நிறைந்த மரியே செபத்தின் முதல் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. அருள் நிறைந்த மரியே வாழ்க. கர்த்தர் உம்முடனே பெண்களுக்குள் ளே ஆசிர்வதிக்கப்பட்டவர் நீரே உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்பட்டவரே.

2. திருச்சபையால் சேர்த்துக்கொண்ட ஒரு பகுதியாக இச் செபத்தின் இரண்டாம் பகுதி அமைகிறது. அர்ச்சிஷ்ட மரியே, சர்வேசுரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக, இப்பொழுதும் எங்கள் மரண நேரத்திலும் வேண்டிக்கொள்ளும், ஆமென்.

''இதோ ஆண்டவருடைய அடிமையானவள் உம்முடைய வார்த் தையின்படியே எனக்கு ஆகக்கடவது'' எனக் கூறிய மரியாள் இறை சித்தத்திற்குத் தலை சாய்த்து தன் வாழ்வின் இறுதி வரை அவரது சித்தத்தை நிறைவேற்றினார். அதனால் அவர் திருச்சபையின் தாய் என்று அழைக்கப்படும் பேற்றைப் பெற்றார். அதனால்,

- மரியாளின் திருநாட்கள் பல திருவழிபாட்டு ஆண்டில் கொண்டாடப்படுகிறது.

உதாரணம் :-

★ புனித கன்னி மரியாள் பெருவிழா (தை 01)

★ புனித கன்னி மரியாவின் விண்ணேற்பு விழா (ஆவணி - 15)

★ புனித கன்னி மரியாள் அமல உற்பவ திருநாள் (மார்கழி - 08)

- மரியாளின் பெயரால் செபம், பாடல், பக்தி முயற்சிகள் ஆகியன இயற்றப்பட்டமை
- மரியாளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்களில் வருடாந்தம் திருவிழா கொண்டாடுவதற்கு அனுமதி அளித்தல்.

உதாரணம் : இலங்கை மாதா ஆலயம் , சதாசகாய மாதா ஆலயம், மருதமடு ஆலயம், மாத்தறை மாதா ஆலயம்.

புனிதர்களில் மரியாளுக்கே மேன்மையான மதிப்பு அளிக்கப்படுகிறது. ஆகவே எங்கள் இதயங்களில் அவ்வன்னை மட்டில் எழும் அன்பையும் மதிப்பையும் எப்போதும் அவருக்கு அளிக்க முயற்சிப்போம்.

**செயற்பாடு**

1. தேவதூதர் கபிரியேல், மரியன்னைக்கு மங்கள வார்த்தை கூறியதிலிருந்து தயாரிக்கப்பட்ட செபத்தை எழுதுக.
2. மரியன்னையின் திருநாட்கள் மூன்றைப் பெயரிடுக.
3. மரியன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஆலயங்கள் மூன்றை எழுதுக.



**வாழ்க்கைக்கு..........**

*தினமும் செபமாலை சொல்வதோடு இயன்றவரை ஒறுத்தல் முயற்சிகள் செய்து மற்றவர்களின் மீட்புக்காக செபிப்போம்.*